# சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 1 1-2-'42 Price 2 Annas.








சங்கிங்கில் எடுத்த படம்: ஸர் ஆர்ச்சிபால்ட்கெர், மடாம் ஷாங்கேஷேக், ஜனரல் சியாங்கேஷேக், மேஜர் ஜனரல் ஜார்ஜ் ப்ரேட், ஸர் ஆர்ச்சிபால்ட் வேவல் இருக்கின்றனர்.

# சென்றவார நிகழ்ச்சிகள்

### மகாத்மா காந்தியின் எச்சரிக்கை.

காசி சர்வகலாசாலை வெள்ளி விழாவை முன்னிட்டு விசேஷ பட்டமளிப்பு விழாவொன்று சென்ற மாதம் 21-ந் தேதி நடந்தது. மகாத்மா அவ்விழாவில் பிரசங்கம் செய்தார். பிரசங்கத்தின் சாரமாவது:—

இந்த சர்வகலாசாலைக்கு 25 வருஷங்களுக்குமுன் அஸ்திவாரக்கல் நாட்டியபோது நான் இங்கு வந்திருந்தேன். அது எனக்கு இப்போது ஞாபகத்துக்கு வருகிறது. ஆனால் அப்போது என்னை மகாத்மா என ஒருவரும் அழைக்கவில்லை. (சிரிப்பு) அப்போது சுவாமி சிரத்தானந்தரைத் தான் மகாத்மா முன்ஷிராம் என அழைத்துவந்தார்கள். பண்டித மாளவியா மிக்க பெருமைவாய்ந்த பிச்சைக்காரர்களில் ஒருவர். அவர் காரியசாதகமும் அடைந்து வருகிறார்; இந்த சர்வகலாசாலை சம்பந்தமாக அவரது ஊழியம் இன்னதென உங்களுக்குத் தெரியும். இப்போதுகூட அவர் ஐந்து கோடி ரூபாய் மட்டும் கொடுத்தால் போதுமெனக் கேட்கிறார்.

இந்த சர்வகலாசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒளிக்காமல் வெளிப்படையாக நான் பேசுவது பற்றி நீங்கள் மன்னிக்கவேண்டும். நமது அபிப்பிராயத்தை நாம் ஆங்கில பாஷை மூலமே வெளியிடுகிறோம். இந்த சந்தர்ப்பத்தில் ஹிந்தியோ, ஹிந்துஸ்தானியோ, உருதுவோ, சமஸ்கிருதமோ உபயோகிக்கப்பட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும். ஆங்கிலேயரின் பாஷையை நாம் அடிமைப் புத்தியுடன் இவ்விதம் உபயோகித்து வருகையில் இந்தியா விஷயத்தில் அவர்கள் சரியாக நடக்கவில்லையெனக் கூறுவது எவ்விதம் பொருந்தும்? நாம் ஆங்கிலத்தில் தவறில்லாமல் அழகாகப் பேசிவிடுவதாக ஆங்கிலேயர்கள் சொல்லிவிட்டால் அளவற்ற சந்தோஷம் நமக்கு ஏற்பட்டுவிடுகிறது. நமது தாழ்வுக்கு இதைவிட வேறு அத்தாட்சி வேண்டுமா! பண்டித மாளவியா, ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் போன்ற சிலர்தான் அவ்விதம் பிழையில்லாமல் அழகாகப் பேசும் திறமை பெற்றிருக்கிறார்கள். மேனாட்டில் சிறந்த அம்சங்கள் என்னென்ன இருக்கின்றனவோ அவற்றை [illegible] பின்பற்ற வேண்டும். ஜப்பானைப் பாருங்கள்! மேனாட்டினரை [illegible] கூவி அழைக்கும் ஆற்றல் அது பெற்றிருக்கிறது. மேனாட்டு பழக்க வழக்கங்களை அடிமைப் புத்தியுடன் அப்படியே அனுஷ்டித்து அது இவ்வித ஆற்றலைப் பெறவில்லை. அவர்கள் தங்கள் சொந்த பாஷை மூலமே மேனாட்டிலுள்ள அரிய அம்சங்களை அறிந்துகொண்டனர். ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள செலவிடும் அரிய காலத்தை வேறு பயன்தரத் தக்க வழிகளில் செலவிடலாம். இந்நாட்டைச் சேர்ந்த பெரியவர்கள் கூட்டங்களில் ஆங்கிலத்தைப் பேசுவதைப் பாமர மக்கள் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அது அவர்களின் பெருந்தன்மையையும் சகிப்புத் தன்மையையும் தான் காட்டுகின்றது. காசி சர்வகலாசாலையிலும் ஆங்கிலத்துக்கு அதிகமாக [illegible] கொடுத்திருப்பது எனக்கு ஏமாற்றத்தைத் தருகிறது. மேடையிலுள்ளவர்களைச் சரியாகப் பார்க்க முடியவில்லை [illegible]ற்காக சபையினர் சிலர் கூச்சலிட்டு குழப்பம் விளைவித்தார்கள். மாணவர்கள் ஒழுங்காகவும் கட்டுப்பாடுடனும் நடக்கவில்லை. கல்வியறிவுடைய அவர்கள் இவ்விதம் நடக்கக் காரணமென்ன? அவர்களின் அதிகப் படிப்புதான் இந்த அவஸ்தைக்குக் காரணம்.

எல்லோரும் அறியக்கூடிய சாதாரண ஹிந்துஸ்தானியையே உபயோகிக்க வேண்டும். இந்திய சர்வகலாசாலைகளில் பல இப்போது பிளாட்டிங் காகிதத்தைப் போல மேனாட்டு [illegible]னப் பான்மையை ஆகரிக்கக்கூடியதாக விருக்கின்றன. ஆனால் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையும் எங்கு போனாலும் அவர்களின் சம்பிரதாயத்தை விடுவதில்லை. இந்திய சர்வகலாசாலைகள் அவ்விதம் செய்வதில்லை. காசி சர்வகலாசாலையிலுள்ளவர்கள் [illegible] கார் சர்வகலாசாலையிலுள்ள[illegible]களுடன் தொடர்பு [illegible] கொண்டிருக்கிறார்களா? ஹிந்து சர்வகலாசாலை மாணவர்கள் தங்கள் மதத்தைப் பற்றியும், தங்கள் கலைஞான உணர்ச்சியையும் மறந்து ஹிந்து மதத்தின் பூர்வீகக் கொள்கைப்படி சமரச நோக்குடன் கலந்து உழைக்கிறார்களா? இதற்கு ஆமாம் என்று அவர்கள் பதிலளித்தால் இந்த சர்வகலாசாலை அவர்களைப்பற்றி பெருமைப்பட வேண்டியதுதான்; உலகத்தில் சாந்தச் செய்தியையும் நல்லெண்ணப் பிரசாரத்தையும் வளர்க்கும் வேலையை அவர்களிடம் தாராளமாக அப்போது ஒப்படைக்கலாம்.

* * * *

### சர்க்காருடன் [illegible]ச்சரவில்லை

சென்ற மாதம் 17-ந் தேதி வார்தாவில் அகில இந்திய காங்கிரஸ் [illegible] முக்கிய அங்கத்தினர்களின் கூட்டமொன்றில் மகாத்மா பேசுகையில் நிர்மாண வேலை திட்டத்தை அநுஷ்டிப்பதால் காங்கிரஸ்காரர்களுக்கும் சர்க்காருக்கும் ஏதாவது சச்சரவு ஏற்பட இடமுண்டாகுமா என்று சிலர் கேட்டதற்கு மகாத்மா பதில் கூறினார். அந்த பதிலை அவர் 'ஹரிஜன்' பத்திரி

கையில் பின்வருமாறு வெளியிட்டிருக்கிறார்.

சச்சரவு நேர இடமில்லாத படியே அந்தத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால்குற்றமில்லாத சிறு காரியத்தையும் பிரமாதப்படுத்தி ஆத்திரத்தைக் கிளப்பிவிடலாம். அதை நிவர்த்திப்பதற்காகவே காங்கிரஸ்காரர்கள் தங்களானவரை முயலுவார்கள். நிர்மாணத்திட்டத்தை நிறைவேற்றுவதால் சுயராஜ்யம் கிடைத்துவிடும் என எண்ணி அதை அநுஷ்டிக்கும் காங்கிரஸ்காரர்களைச் சர்க்கார் தடுத்தால்வேறு வழியில்லை. சுயராஜ்யம்பெற அஹிம்ஸா முறையுடன் கூடிய வழி நமக்கு இது ஒன்றுதான். சர்க்கார் அவ்வித முயற்சியை வரவேற்க வேண்டும். பூரண அஹிம்ஸா முறையும் கூடாதென சர்க்கார் எண்ணிலதான் அதைத் தடுக்க முன்வருவார்கள். அங்ஙனமில்லை சச்சரவு நேர்ந்தேதீரும். ஆனால் சச்சரவு நேராதென்பதே என் எண்ணம். எப்படியும் யுத்தம் நீடிக்கும்வரை காங்கிரஸ் ஊழியர்கள் அந்த வேலைகளைச் செய்து வரவேண்டும். அவர்கள் நிர்மாணத்திட்டத்தைநிறைவேற்றுகையில ஆர்பாட்டம் செய்யக்கூடாது. பிரசங்கங்களும் புரியக்கூடாது அந்தத் திட்டத்தின் அம்சங்கள் பல சர்க்காரும் பொதுஜனங்களும் கலந்துழைக்கக் கூடியதாகவே இருக்கின்றன.

* * *

### மகாத்மாவின் வியாசம்

'ஹரிஜன்' பத்திரிகையில் மகாத்மா "வகுப்பு ஒற்றுமை" என்ற தலைப்புடன் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அதில் அவர் சட்ட சபை வேலையால் சுதந்தரம் கிடைக்காதென்றும் வகுப்பு ஒற்றுமைதான் அத்யாவசியமென்றும் அதில்லாவிட்டால் நாட்டில் சமாதானமே ஏற்படாதென்றும் பாகிஸ்தான் திட்டத்தாலும் சமாதானம் தோன்றுதென்றும் மன ஒற்றுமை ஏற்பட்டுவிட்டால் இந்த வகுப்பு ஒற்றுமை சுலபத்தில் கைகூடுமென்றும் பரஸ்பர ஒத்துழைப்பும், சேவையுமே இதற்கு அத்யாவசியமென்றும் எழுதியிருக்கிறார்.

* * * *

### காந்திஜி கூறும் வழி

மாகாத்மா காந்தி சென்ற மாதம் 25-ந்தேதி ஹரிஜனில் நிர்மாணத் திட்டத்தை மேற்கொண்டு விளக்கிக் கூறுகிறார். அரசியல் சம்பந்தமில்லாத இந்த வேலையில் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென அவர் கேட்டுக்கொள்ளுகிறார். பசியால் வாடுகிறவர்களுக்கு உணவளிப்பதும் உடையில்லாதவர்களுக்கு உடையளிப்பதும்தான் இபபொழுது நம்முன் உள்ள வெகு முக்கியமான வேலை என்றும் அவர் கூறுகிறார்.

* * * *

### 'ஸி. ஆர்.' விளக்கம்

"இந்தியாவின் பாதுகாப்பும் நெருக்கடியும்" என்ற விஷயமாக ராஜாஜி சென்ற மாதம் 24-ந் தேதி மாலை கோகலே ஹாலில் பேசுகையில் இந்திய மக்களின் யுத்த காலப் பொறுப்பு எத்தன்மையது என்பதை விளக்கினார். இந்தியாவின் கோரிக்கைக்குப் பிரிட்டன் இசைந்தால் ஜனங்கள் மகத்தான தியாகத்தை செய்ய முன் வருவார்களென்பதை அவர் சுட்டிக் காட்டினார். விசை பிரிட்டிஷ் சர்க்காரிடமிருக்கிற தென்றும், இந்தியாவிலுள்ள 30 கோடி மக்களின் ஹிருதய விளக்குகள் ஒளி விசுமா அல்லவா என்பது பிரிட்டிஷார் என்ன செய்வார்களென்பதை பொறுத் திருக்கிறதென்றும் ஸ்ரீ ஸி. ஆர். கூறினார்.

தேசியக் கோரிக்கைக்கு "பிரிட்டிஷ் சர்க்கார் இணங்கா விட்டாலும் ஜனங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இந்தியருக்கு இருக்கிறதென்றும் ஆகவே கிராமங்களில் கொள்ளை முதலியன நிகழாதபடி பார்த்துக் கொள்ளுவதற்கும், பொருள் பஞ்சம் ஏற்படாதிருக்கும்படி செய்வதற்கும் மக்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறினார் இக் காரியங்களைக் கவனிப்பதற்காக சர்க்காருக்கு உதவும் முறையில் கிராமங்களில் ஜனங்கள் தாங்களாக ஒருவித சர்க்காரை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் ஸ்ரீ ஸி. ஆர். தெரிவித்தார்.

★

## ஐரோப்பியச் செய்திகள்

### ஆஸ்திரேலியா கோரிக்கை

ஜப்பானியர் நியூ கினி தீவிலும சால்மன் தீவுப் பிரதேசத்திலும் தமது படைகளை இறக்கியிருக்கின்றனர்.

ரா்பாலிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு 1100 வெள்ளைக்கார ஸ்திரீகளும் குழந்தைகளும் விமானத்தில் அப்புறப்படுத்தப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆக்டிங் பிரதம மந்திரியான மிஸ்டர் போர்ட் பின்வருமாறு தெரிவித்தார்;—

ராபாலை ஜப்பானியர் தாக்கியிருக்கின்றனர். ஆஸ்திரேலியாவைத் தாக்குவதற்கான முயற்சியின் முதல் கட்டமாக இதனை ஆஸ்திரேலியர் கொள்ள வேண்டும். ஜப்பானியர் ராபாலில் தங்களது படைகளை இறக்குவதில் வெற்றி பெற்றால் யுத்தம் ஆஸ்திரேலியாவை அதிகமாக நெருங்கியிருக்கும். ராபால் அவர்களுக்குச்சிறந்த ஸ்தானமாக இருக்கும். அங்கிருந்து அவர்கள் தெற்கே முன்னேறி நமது பிரதேசங்களின் இதர பாகங்களைத் தாக்குவார்கள். அவசியமான தளவாடங்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். ராணுவத்தில் சேர்ந்த ஆயிரக்கணக்கான யுவர்கள் பெருந்தியாகஞ் செய்தார்கள். மற்றவர்கள் தொழிற்சாலைகளில் அதிக நேரம் வேலை செய்து வருகிறார்கள் இதைவிட அதிகமானவற்றைச் செய்ய வேண்டியது அவசியமாக இருக்க வேண்டும்.

* * * *

### ரஷ்ய யுத்தம்

ஸோவியத் ராணுவ அறிக்கை தெரிவிப்பதாவது:—

ஜெர்மன் துருப்புகள் சில இடங்களில் திருப்பித் தாக்கி முன்னேறும் ரஷ்யத் துருப்புகளைத் தடுக்க முயன்றன. ஆனால் இம் முயற்சி வீணாயிற்று. பெருவாரியாக எதிரிகள் சேதமாயினர்; ஏராளமாகத் தளவாடங்களும் கைப்பற்றப்பட்டன. டெமனோ, ஆண்ட்ரியபால், கோம், டோரோபெட்ஸ், ஸபாட்டுயா, மேற்கு வீனு முதலிய பட்டணங்கள் ஸோவியத் படைகளால் பிடிக்கப்பட்டன.

ஓலெனினோ, ஸ்டாரயா டோரோபா என்ற பட்டணங்களும் பிடிக்கப்பட்டதாக ஸோவியத் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

* * * *

### ஜப்பானின் யுத்ததிட்டம்

ஜப்பானியப் பார்லிமெண்டில் சென்றமாதம் 21-ந்தேதி பிரதம மந்திரியான ஜெனரல் டோஜோ பேசுகையில் கூறியதாவது:—

தனது லக்ஷியம் கைகூடும் வரை ஜப்பான் தனது கையிலெடுத்த ஆயுதத்தைக் கீழேவைக்காது.

போர் நடத்து நடக்கையில் ஜப்பான் ராணுவத்திற்கு முக்கியமான மூலஸ்தானங்களையும் கிழக்கு ஆசியாவிலுள்ள முக்கியமான மூலப் பொருள்கள் உளள இடங்களையும் தனது ஆதிக்கத்திற்குள் கொண்டுவர உதத்தேசித்திருக்கிறது. இதன் மூலம் ஜப்பான் தனது போர் பலத்தை அதிகரிக்க உத்தேசித்திருக்கிறது.

இதே சமயத்தில் ஜெர்மனி இத்தாலியுடன் ஜப்பான் நெருங்கி ஒத்துழைத்துத் தனது தீவிரப்போர் நடவடிக்கைகளை மேன்மேலும் அதிகரிக்கவும் விஸ்தரிக்கவும் செய்யும்.

உலக சமாதானத்திற்கு உதவி செய்வதற்காகக் கிழக்கு ஆசியாவில் யாவரும் செழிப்பாக இருக்கும்படி சேர்ந்து வர்த்தம் முதலியன செய்து வாழும்பொது முறையை ஏற்படுத்துவதே ஜப்பானின் இலக்ஷியமாகும். இந்தப்பொது நல்வாழ்வுக்கான திட்டத்தில் கலந்து கொள்ள விருப்பமாக இருக்கும் தேசிய கோஷ்டிகள் சுயேச்சையாக வாழ்வதற்கு இடமளிக்க ஜப்பான் உத்தேசித்திருக்கிறது.

இந்த வேலையில் ஜப்பானுடன் ஏற்கெனவே மஞ்சுகோ சர்க்காரும் சீன தேசீய கவர்ன்மெண்டாரும் (நான் கிங் சர்க்காரும்) இந்தோ சீன சர்க்காரும் தாய்லாந்து சர்க்காரும் ஒத்துழைத்து வருகிறார்கள்.

ஜப்பான் அச்சு நாடுகளுடன் கொண்டுள்ள ஒற்றுமை உறவை மேற்கொண்டு பலப்படுத்த உத்தேசித்திருக்கிறது. ஜப்பான் அச்சு நாடுகளுடன் ராஜீய, ராணுவ பொருளாதாரத் துறைகளிலும் இதர பல்வேறு துறைகளிலும் கொண்டுளள உறவை அதிகரித்து பொது லக்ஷிய சித்திக்காக முன்னேறிச் சென்று செயல்புரிய உத்தேசித்திருக்கிறது.

பிலிப்பைன் வசிகள் பொதுச் செழிப்பையும் நல் வாழ்வையும் அடைவதற்கான வேலையில் ஒத்துழைக்க உண்மையான சம்மதத்தைக் காட்டினால் அவர்கள் கௌரவத்துடனும் சுயேச்சையுடனும் வாழ இயலும்படி செய்ய வேண்டுவனவற்றை ஜப்பான் சந்தோஷத்துடன் செய்யும்.

இந்த யுத்தத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் சேர்ந்து பெற்றிருக்கும் பலத்தையும் அதிலும் முக்கியமாக அவர்களது பொருள் பலத்தையும் குறைத்து மதிப்பது முட்டாள்தனமாக இருக்கும்.

ஜப்பானின் தேசிய சக்தியைத் திரட்டுவதற்கும் நீண்ட கால யுத்தத்திற்கு அத்யாவசியமான எல்லா ஆயுத சாதனங்களும் தேச மக்களுக்குக் கிடைக்குமாறு செய்வதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தையும் எடுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர்.

* * * *

### பெரிய போர் நடவடிக்கை?

சென்ற மாதம் 17-ந்தேதி ஜெர்மனியும் இத்தாலியும் ஜப்பானும் பர்லினில் ஒரு ராணுவ ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. இது பல்வேறு முனைகளில் பெருவாரியான முறையில் போர் நடவடிக்கைகள் எடுப்பதற்கான பூர்வாங்கமென தாங்கள் நம்புவதாக ஸ்பெயின் தேசப் பத்திரிகைகளுக்கு அவற்றின் பர்லின் நிருபர்கள் எழுதுகின்றனர்.

'மாட்ரிட்' என்ற பத்திரிகையின் பர்லின் நிருபர் எழுதுவதாவது;—சமீபத்தில் மத்தியதரை கடலில் ஜப்பானிய கடற்போர் முறைகள் அனுஷ்டிக்கப் படுமென்று பர்லினில் எதிர் பார்க்கப்படுகிறது.

'இன்பார் மாஸி' என்ற ஸ்பானிஷ் பத்திரிகை சிங்கப்பூரின் பெரிய படத்தை வெளியிட்டுப் பின் வருமாறு எழுதுகிறது:—

பல கண்டங்களின் முக்கியமான மூலைகளில் இங்கிலாந்து முக்கியமான ஜலசந்திகளின் போக்குவரத்தைக் கட்டுப்பாடு செய்யக்கூடியபடி பெரிய கோட்டைகளை அமைத்திருக்கிறது. இக்கோட்டைகளில் ஒன்றுக்கு தற்போது தான் முதன் முதலாக ஒரு பெரிய படைபலம் வாய்ந்த தேசம் நிலத்திலிருந்து பின்புறம் அபாயத்தை விளைவித்து வருகிறது. ராணுவ நிலையிலிருந்து இந்தப் பரிக்ஷையைவிட அதிக ரஸமான பரீக்ஷை வேறெதுவுமிருக்க முடியாது.

ஜப்பானிய ராணுவத்தின் பிரதம நிர்வாகியான ஜெனரல் சுகிமாயுவுக்கும் கடற்படை பிரதம நிர்வாகியான அட்மிரல் ஓஸாமி நாகனோவுக்கும் முஸோலினி பின்கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறார்:—

ஜப்பானுக்கும் ஜெர்மனிக்கும் பொது விரோதிகளாக இருப்பவர்களுடன் அந்நாடுகள் செய்யும் போராட்டத்தில் அவற்றுடன் சேர்ந்து நின்று அதற்காக எல்லாவற்றையும் தியாகஞ் செய்ய இத்தாலி தயாராக இருக்கிறது.

ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய 3 நாடுகளும் பர்லினில் ராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டபோது முஸோலினி இச் செய்தியை அனுப்பியதாக ரோம் செய்தி கூறுகிறது.

* * * *





இங்கிலாந்தில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு வெளியே வருகிறார். அப்போது கூட்டத்தினர் அவரைச் சூழ்ந்துகொண்டனர். பத்திரிகையைச் சேர்ந்த ஒரு யுவதி பக்கத்தில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# 'அந்த பேட்டி' ★ ★

## ★ ★ ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்

எழுதியது

பத்திரிகைகளில் பிரசுரமாகும் பேட்டி விவரங்களைப் பலரும் அறிவார்கள். ஐக்ய மாகாண மாஜி மந்திரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் அடியில் பிரசுரமாகும் கட்டுரையில் தமது அனுபவங்களை மிகவும் ரசமான விதத்தில் வர்ணித்திருக்கிறார். ஹாஸ்யம் மிகுந்தது: படிக்கப் படிக்க ருசி பிறக்கும். இதைப் படித்த பின் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டிடம் அநுதாபம் காட்டாதவர்கள் இருக்க மாட்டார்கள். "பத்திரிகைக்காரர் பெரிய உபத்திரவக்காரர்"தான் என்ற எண்ணம் எல்லாருக்கும் ஏற்படுவது சகஜம்!

### "பொருமைப் படுப்படியானது"

ராஜீயத்தைப்பற்றி நான் அதிகம் அறியாத நாட்களில், பத்திரிகைகளில் அப்போதைக்கப்போது வெளியாகும் பேட்டி விவரங்களை நான் மிகுந்த ஆவலுடன் படிப்பது வழக்கம். அவற்றில் காணப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் நான் வேத ப்ரமாணமாகக் கருதி வந்தேன். அதைக் கூறியவர் அரசியல் நிபுணரா, அல்லது ஆட்டத்தில் சதுரரா, அல்லது சினிமா நக்ஷத்திரமா என்பதைப்பற்றி எனக்கு அக்கரையில்லை; இந்த உலகத்திலேயே பத்திரிகைக்காரரின் வாழ்க்கைதான் பிறர்·பார்த்து பொருமைப்படுப்படியானது என்று நான் எண்ணியதுண்டு. பல பெரியார்களுடனெல்லாம் நெருங்கிப் பழகி, அவர்கள் வெளியிடும் பொன் மொழிகளை இவ்வுலகிலுள்ள மற்ற பாமர மக்கள் அறியச் செய்யும் பாக்கியம் அவருக்கன்றோ உண்டு! இதற்கப்பால் எவ்வளவோ சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன; வருஷக் கணக்கைக் கவனித்தால் ஒன்றும் அதிகம் ஆகவில்லை; ஆயினும் இப்போது என் அறிவு அபிவிருத்தியடைந்திருப்பதுடன் அனுபவமும் அதிகரித்திருக்கிறது.

ராஜீய வாழ்க்கை ஒரே நிலையானதல்ல; பள்ளமும் மேடும் நிறைந்தது; ராஜீயத் துறையில் இறங்கிய பின், பத்திரிகைக்காரர் கையில் சிக்கிக்கொள்பவர்களுள் நானும் ஒருத்தி என்பதும், எங்கள் அபிப்பிராயங்கள் மிகவும் அலுத்துப் போன ஜனங்கள் மீது சுமத்தப்படுகிறது என்பதையும் நான் அறிந்தேன். என் நிலைமை என்ன? நான் எவ்விதம் நடந்துகொண்டேன்? "துரதிருஷ்டமானது" என்ற வார்த்தையில் அதற்கு சங்கிரகமாகப் பதில் கொடுத்துவிடலாம். உங்களுக்கு இஷ்டமிருந்தால் மேலே படியுங்கள்; முன்னதாகவே எச்சரிக்கிறேன்!

### "இரண்டு உபத்திரவங்கள்"

இந்த உலகத்தில் டெலிபோனும் பத்திரிகைக்காரரும் தான் இரண்டு பெரிய உபத்திரவங்கள் என்பது என் அபிப்பிராயம். வேதனை சகிக்க முடியாமற் போனால் டெலிபோன் கம்பியை அறுத்தெறியலாம்; ஆனால் பத்திரிகைக்காரரிடம் அவ்வளவு சுலபமல்ல! அவர் எங்கும் இருக்கிறார்; அவருக்குத்தடை கிடையாது; அவர் கொள்ளும் நம்பிக்கையும் சாஸ்வதமானது. ஒரு சாதாரண மனிதர் எதைக் கண்டு ப்ரமித்துப் போகிறாரோ, அதனால் பத்திரிகைக்காரர் பின் வாங்குவதில்லை; மேலும் மேலும் விடாமல் முயற்சியில் முனைகிறார்; அவருக்குச் சூடு கொடுப்பது வாத்தின் முதுகில் ஜலத்தைக் கொட்டுவதற்குத்தான் சமமாகும்.

"பதவி யேற்பதை ரொம்பவும் ஆக்ஷேபித்து விட்டு கடைசியில் மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டதேன்?"–நான் கொடுக்கும் பதிலைப் புறக்கணித்து விடுகின்றனர்; மறுநாள்

பத்திரிகைகளில், "மந்திரி பதவி யேற்கும்படி மிஸஸ் பண்டிட் கட்டாயப் படுத்தப்பட்டார்" என்று செய்தி வெளியாகிறது.

### வீண் தொந்திரவு ஏற்பட்டது

ஒரு பொதுக் கூட்டத்தில் நான் பேச ஏற்பாடாகியிருந்தது. என்னுடைய பிரசங்கத்தின் பிரதியொன்றைத் தங்களுக்கு முன்னதாகவே கொடுக்கும்படி சில பத்திரிகைக்கார இளைஞர்கள் என்னைக் கேட்டனர்! என்னிடம் அம்மாதிரி பிரதியொன்றும் கிடையாது என்றும், என்னுடைய பிரசங்கத்தைப் பிழையின்றி அவர்கள் பிரசுரிப்பார்கள் என்று நான் எதிர்பார்ப்பதாகவும் அவர்களிடம் தெரிவித்தேன். தாங்கள் அப்படியே செய்வதாக என்னிடம் உறுதி கூறிவிட்டு அவர்கள் சென்றனர். நானும் திருப்தியுடன் கூட்டத்திற்குப் புறப்பட்டேன். இந்த பத்திரிகைக்கார இளைஞர்கள் நான் எது முக்கியம் என்று நினைக்கிறேனோ அதை அலக்ஷியம் பண்ணியும், அறியாமையால் நான் எது மிகவும் அற்பம் என்று கருதினேனோ அதைப் பெரிதாக்கியும், பிரசுரிப்பார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நடப்பது இதுதான்: காலைப் பத்திரிகைகளில் நான் செய்யும் பிரசங்கங்களை படிப்பவர்கள் அவற்றில் அடிக்கடி நான் கூறியதாக வெளிவரும் முரண்பட்ட வாசகங்களைக் கண்டு வியப்படைவார்கள் என்பது உண்மை. சமீபத்தில் பல சிறுமிகள் முன்னிலையில் நான் பேச நேர்ந்த பொழுது தற்காலத்தில் ஏற்பட்டுவரும் முற்போக்கை விரும்பாத சிலர், 'வீட்டின் தேவதையை கெடுக்கக்கூடாது' என்றெல்லாம் சொல்லி, ஸ்திரீகளைப் பற்றியும் அவர்களது கடமைகளைப் பற்றியும் பிரஸ்தாபித்து வருவதைக் கேட்டு மயங்கி விடக்கூடாது என்று சொன்னேன். இது சம்பந்தமாக அன்றைய தினம் உள்ளூர் தினசரியொன்றில் இதே காரணத்தைக் கொண்டு ஸ்திரீகளுக்கு விவாகரத்து உரிமை அளிக்கக்கூடாது என்று ஒருவர் எழுதியிருந்த கடிதத்தையும் குறிப்பிட்டேன். பிறகு பத்திரிகைகளைப் பார்க்கும்போது பின் கண்ட விஷயம் காணப்பட்டது:—"ஸ்திரீகள் விவாகரத்து உரிமைகளை ஆதரித்து மிஸஸ் பண்டிட் பேசியதாவது, 'நீங்கள் இனி தேவதைகளாக இருக்கக்கூடாது. மனுஷ்ய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கவேண்டும்... என்று". இதற்குப்பின் எனக்கு வந்த புத்திமதிக்கும் கண்டனத்திற்கும் அளவே கிடையாது. புத்திசாலியான எனது இளைய நண்பர் எனது பிரசங்கத்தைப் பிரசுரிக்காமல் விட்டிருந்தால், எனக்கு அநாவசியமான உபத்திரவம் ஏற்பட்டிருக்காது.

### இங்கிலாந்தில் பேட்டி

ஐரோப்பாவுக்கு நான் சென்றபோது, பத்திரிகா நிருபர்களுக்கு நான் அளித்த பேட்டிகள், என்னை மிகவும் மோசமான நிலையில் வீழ்த்தின: நள்ளிரவில் நான் தாயுடன் ஆகாய விமானத்தை விட்டிறங்கியபோது, போட்டோ பிடிப்பவர்களும் மிகுந்த பரபரப்புள்ள பத்திரிகைக்காரர்களும் என்னைச் சூழ்ந்து கொண்டனர். அச்சமயம் நான் பின்னர் பேட்டியளிப்பதாகக் கூறிவிட்டேன். ஸ்திரீ பத்திரிகா நிருபர்களையும் நான் இங்கு தான் முதன் முதல் கண்டேன்: பத்திரிகைகாரர் சம்பந்தப்பட்டமட்டில் புருஷர்களைவிட ஸ்திரீகளால்தான் அதிக தொந்திரவு ஏற்படுகிறது என்பது நான் அனுபவ பூர்வமாக அறிந்த உண்மை.

ஒரு யுவதி என்னுடைய அறைக்குள் நுழைகிறாள்: நல்ல நாகுக்கான ஆடை: பார்ப்பதற்கு ப்ரியமான பார்வை: "மிஸஸ் பண்டிட், நீங்கள் சௌக்யமா? உங்களைச் சந்திப்பது மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது: இந்திய ஸ்திரீகளைப்பற்றி நீங்கள் ஏதாவது சில வார்த்தைகள் சொல்ல முடியுமா?........." இதற்கப்புறம் எங்கள் இருவருக்கிடையே [illegible] நடக்கிறது: அவளது கேள்விகளுக்கு என்னாலியன்றவரை நான் பதில் தருகிறேன். அறையை விட்டுக் கிளம்பும்போது "தேகாப்பியாஸத்தைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று சர்வ சாதாரணமான முறையில் வினவுகிறாள்: ஒருவித முன் யோசனையுமின்றி "ஆமாம், எனக்கு அதில் நம்பிக்கையுண்டு. அதிலும் இந்திய முறைகளில்தான் அதிக நம்பிக்கை" என்று பதில் கொடுக்கிறேன். மறுநாள் காலை ஒரு பிரபல லண்டன் தினசரியில் பின் கண்ட விஷயம் பிரசுரமாகிறது: "தினமும் 18 மணி நேரம் வேலை செய்யும் ஸ்திரீ மந்திரி காலையில் தலைகீழாக நிற்கிறார்" என்று.

### "உண்மைக்கு விரோதம்"

மற்றுமொரு யுவதியும் என்னைப் பேட்டியிடுகிறாள்: பார்ப்பதற்கு சுறுசுறுப்பானவள்: அவ்வளவு துணிகரமானவள் இல்லை; கொஞ்சம் சங்கோஜம் உள்ளவள்: ஆயினும் தைர்யமாக பின் கண்டபடி என்னை அவள் கேள்வி கேட்கிறாள்:-"தங்களது கணவரைத் தாங்கள் சிறையில் சந்தித்தீர்களா?" சிறை புகுவதற்கு பத்து வருஷங்களுக்கு முன்பே நான் அவரை மணந்தாகிவிட்டது என்று நான் அவளிடம் தெரிவிக்கிறேன். "நீங்கள் அவரைச் சிறையில் சந்தித்தீர்கள் என்றால் நீங்கள் ஆட்சேபிக்கமாட்டீர்கள் அல்லவா? இது பொது ஜனங்களை மிகவும் ரசிக்கச் செய்யும்" என்று [illegible] காண்டே அவள் மேலும் பேசுகிறாள். இம்மாதிரி சொல்வது தப்பு என்றும், எனக்கு பதினைந்து வயது நிரம்பிய பெண் ஒருத்தி இருப்பதே இதற்கு போதிய மறுப்பு என்றும் நான் எவ்வளவு கூறிப்பார்த்தும் பயனில்லை, அவள் என்னமோ தான் பிடித்த பிடியை விடவேயில்லை: பிறகு அவளது பத்திரிகையில் என்னைப் பற்றியும் என் வாழ்க்கையைப் பற்றியும் ரஸமானவையும் ஆனால் உண்மைக்கு விரோதமானவையுமான விஷயங்கள் வெளியாகின்றன; சிறையில் நான் என் புருஷரைச் சந்தித்து பின்பு அவரை மணந்தேன் என்பது அவற்றுள் ஒன்று.

மீண்டுமொரு ஸ்திரீ என் பேட்டிக்காக வருகிறாள். 'மிஸஸ் பண்டிட், உத்தியோக அலுவல்களைக் கவனிப்பது உங்களுக்கு அலுப்பாக இல்லையா? வீட்டு வேலையைச் செய்ய நீங்கள் அதிக ஆவல் கொண்டிருப்பதாகவே நான் எண்ணுகிறேன்." சாதாரண வேலையையும் அசாதாரண வேலையையும் சமமாகப் பாவிப்பதாகவே நான் இதற்குப்பதில் கொடுக்கிறேன். "இந்திய ஸ்திரீ மந்திரி தனது பதியின் கால் உறை (Socks) யைச் செப்பனிடுகிறார்" என்று பத்திரிகைகளில் மறுநாள் பிரசுரமாவது, தினமும் புதிய புதிய செய்திகளில் சிரத்தை காட்டுபவர்களுக்கு திருப்தியைத் தருகிறது.

### பொது ஜனங்கள் என்ன நினைப்பார்கள்?

அங்கு புருஷர்களுக்கும் சரியான சந்தர்ப்பம் கிடைக்காமல் போகிறதில்லை. இந்திய ஸ்திரீகளைப்பற்றிய தகவலை அவர்கள் வேண்டுகின்றனர். அவர்கள் கேட்கும் கேள்விகளைக் கவனிக்கும்போது, எனக்கு அவ்வளவாக சித்த ஸ்வாதீனமில்லை என்று அவர்கள் எண்ணும்படியாக என் முகத்தில் என்ன குறிகளைக் காண்கின்றனர் என்பது எனக்கே தெரியவில்லை! இங்கு புருஷர்கள் வெளியிடும் பேட்டி விவரங்களில் முதலில் நான் அணிந்திருக்கும் ஆடையைப்பற்றிய வர்ணனை ஆரம்பமாகிறது; இது அதை எழுதியவரது நோக்கத்தையும் மனப்பான்மையையுமே தழுவியதாக இருக்கிறது; அவர் அபேதவாதியாயிருந்தால் நான் ஆடம்பரமின்றி உடை தரித்திருப்பதாகக் குறிப்பிட்டு எனது சேவையில் ஒரு பகுதியை எடுத்துக் காட்டுகிறார். பத்திரிகை நிருபர் ஒரு பிரபல பத்திரிகையையோ அல்லது மாறுதல் விரும்பாத கோஷ்டியைச் சார்ந்த பத்திரிகையில் இருப்பவரானால், கீழ்நாட்டில் சகஜமாயுள்ள ஆர்ப்பாட்ட ஆடைகளை நான் அணிந்திருப்பதாக விவரித்து, நெற்றியில் ஜாதிக்குரிய குங்குமதிலகத்தை இட்டுக்கொண்டிருப்பதையும் மருதாணி பூசியதால் சிவந்திருக்கும் என் கைவிரல்களையும் கால்விரல்களையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். இம்மாதிரி ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக்கும் இந்த விவரங்களைப் படித்து இங்கிலாந்தில் பொதுமக்கள் என்ன அபிப்பிராயப் படுவார்கள் என்பது எனக்கே ஆச்சர்யமாக இருக்கிறது.

### ஸ்திரீ புருஷ சமத்துவம்

என்னுடைய சகோதரர் அளிக்கும் பேட்டிகளைப்பற்றி எனக்கு நினைவு வருகிறது. அவரை என்ன கோர்வையான, என்ன ஸ்பஷ்டமான, என்ன புத்திசாலித்தனமான கேள்விகள் கேட்கின்றனர். ஆனால் பொதுஜனசேவை புரிய முயற்சிக்கும் என் விஷயத்தில்மட்டும், துணிகளிலும் குழந்தையிடமும் தான் நான் சிரத்தை கொண்டிருப்பதாகவும், செல்வமும் சௌகர்யமும் அமைந்த ஸ்திரீ ஆத்மதிருப்திக்காக சமூக சேவையில் சற்று ஈடுபடுவது போல் நானும் ஈடுபட்டிருப்பதாகவும் எண்ணுகின்றனர்.

சம்பிரதாயம் மாறுவது சுலபமல்ல; உலகில் எல்லாம் நிதானமாகவே நடக்கின்றன; மனுஷ்ய வர்க்கத்தினுடைய சிந்தனை சக்தியின் முற்போக்கு இதையும் விட நிதானமானது. நாகரீகம் முதிர்ந்த பல நாடுகளில் ஸ்திரீகள் புருஷர்களுக்கு சமம் என்று கூறப்படுகின்றதாயினும், பஹிரங்கமாக சம அந்தஸ்து கொடுப்பதை ஒப்புக்கொண்டவர்களே உண்மையில் அவர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதி வருகின்றனர். ஸ்திரீகளின் நிலைமை அபிவிருத்தியடைவதை இவ்விதம் தடுக்க முடியாது. ஸ்திரீகளது முன்னேற்றத்திற்கு புருஷர்கள் காட்டும் பரிவோ பெருந்தன்மையோ காரணமில்லை. அவர்களது நிலைமை உயர உயரத்தான் இவ்வுலகில் க்ஷேமாபிவிருத்தி ஏற்படும் என்பதை யாவரும் ஒப்புக்கொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

Vijayalakshmi Pandit

---

அடுத்த வாரம் ஸ்ரீமதி பண்டிட் தமது பிரசங்க அனுபவங்களை விஸ்தரித்திருப்பது வெளிவரும்.



# சட்ட சபை வேலை

## ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

சட்ட சபை வேலையைப் பழிப்பது சுலபம்; பழித்தும் வருகிறார்கள். அதைவிட முக்கியமான வேலையிருந்தால் செய்யட்டும்; ஆக்ஷேபணையில்லை; அதனால் முக்கியமான வேலை தடைப்படுவதாயிருந்தால் விடட்டும்; அதற்கும் ஆக்ஷேபணையில்லை. சட்டசபையில் உழைப்பதே தவறு என்று நினைத்தால் ஒருவழியாய் விலகுவதே உசிதம். விலகாமலும் வேலை செய்யாமலும் இருந்தால் வாக்காளர் பால் ஏற்ற கடமையை நிறைவேற்றியதாகாது. சட்டசபைகளின் வரையறைகளை அறிந்தே நுழைந்தனர். மாகாணங்களில் சட்டசபைகளுக்கு அதிகாரம் இல்லையென்று சொல்வதற்கில்லை. ஏகதேசம் உண்டு. பெரும்பான்மை ஸ்தானங்கள் கிடைத்த இடங்களில் காங்கிரஸ் அதிகாரமும் ஏற்றது. அதிகாரம் புளித்தது எதிர்பார்த்த அளவு ஏறவில்லை; அதிகாரப் பதவிகளைத் துறந்தனர். இதர கக்ஷிகளுக்கு பலமில்லை. தேர்தல் நடத்தினால் பலம் பிறக்குமென்ற நம்பிக்கையுமில்லை. மந்திரி ஆட்சி மறைந்து கவர்னர் ஆட்சி நிலைத்தது. காங்கிரஸ் மாகாணங்களில் சட்டசபைகளைக் கூட்டுவதையே நிறுத்திவிட்டனர். சட்டசபைகளைக் கலைக்காமலும் கூட்டாமலும் இருப்பது நியாயமா என்ற கேள்வி எழுகிறது. பிரஸ்தாப விஷயத்திற்கு, அது புறம்பானது. காங்கிரஸ் மாகாணங்களில் சட்ட சபை வேலை செய்வதா இல்லையா என்ற பிரச்னை தானாகத் தீர்ந்து விட்டது; பிற மாகாணங்களில் நிலைமை வேறு. அங்கே காங்கிரஸ் அல்லாத மந்திரி சபைகள் அமைந்திருக்கின்றன. சட்டசபைகள் கூடுகின்றன. காங்கிரஸ் அங்கத்தினர்கள் கடமையென்ன? நிலையான நியதியிருப்பதாகக் காணவில்லை. பார்லிமெண்டரி போர்டு விதாயகம் செய்து வருகிறது. ஒரு சமயம் போகச் சொல்லுகிறார்கள். மற்றொரு சமயம் வேண்டாம் என்கிறார்கள். ஒவ்வொரு சமயமும் அநுமதி கோருவதும் கொடுப்பதும் கொடுக்க மறுப்பதும் ரசிக்கவில்லை. இந்த போர்டில் ஸ்தானம வகிப்பவர்கள் பெரிய தலைவர்கள்; ஆனால் சட்டசபை வேலையில் அநுபவமோ அநுதாபமோ இல்லாதவர்கள். காங்கிரஸ் பொது வேலைத்திட்டத்தை கொண்டு நிதானிக்கிறார்கள். காங்கிரஸ் வேலைத் திட்டத்தை அநுசரித்தே வாக்கு கோரப்பட்டது உண்மையே. ஆனால் திட்டம் திருந்தும்போது வாக்காளர் உரிமைகளையும் சற்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அன்றாட வாழ்வில் குறைகள் பல காண்கின்றன. மாகாணத்திற்கு மாகாணம் வித்தியாசப்படுகின்றன. பரிகாரம் தேட சட்டசபை வசதியளிக்கிறது. எதிர்க் கக்ஷியிலிருந்தாலும் அதிகாரம் செலுத்துவோரைக் கட்டுப்படுத்த இடமுண்டு; ஜனநாயக மர்மம் அதுதான். அநுபவமும் அப்படியே. ஏன் உதவக் கூடாது? காங்கிரஸ் வாதிகள் காங்கிரஸ் கொள்கையில் பற்றுள்ளவர்கள். தவறாக நடக்க மாட்டார்கள். சுவாதீனம் கொடுக்கத் தயங்குவானேன்? சிறுபான்மை கக்ஷி பெரும்பான்மைக் கக்ஷியாக மாறுவது வேலை செய்வதைப் பொருத்தது. வேலையே செய்யாமல் மறுமுறை ஆதரவு கோரினால் கிடைக்குமா? தேச நலம் பெரிது. யாரும் அதைவிடச் சொல்லவில்லை. அதற்குப் பங்கமில்லாமல் மாகாண நலத்தை இயன்ற அளவு நாடுவதில் தவறென்ன?

மாகாண சட்டசபை போகட்டும், மத்திய சட்டசபை விஷயத்திலும் அசிரத்தை கொள்வானேன்?



அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள் போஜனம் செய்கின்றனர். ஸ்ரீமதி சரோஜினி தேவி, டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார், பாபு ராஜேந்திரர் முதலியோரைப் படத்தில் பார்க்கலாம். (பி. என். கே)

பொதுவாகக் குறைத்துக் கூறுகிறவர்கள் பிரித்துப் பேசவில்லை. இரண்டையும் ஒரு தராசில் ஏற்றுகிறார்கள். இது தவறு. மாகாண சட்ட சபைகளுக்குள்ள அதிகாரம் மத்திய சட்ட சபைக்கில்லை. நிர்வாகசபை ஜவாப்தாரியானதல்ல. கட்டுப்பட்டு நடக்கவேண்டியதில்லை. இருந்தாலும் சட்டசபையை அலக்ஷியம் செய்துவிடுவதற்கில்லை. ஆழ்ந்த உண்மையில் அடங்கிக்கிடக்கிறது காரணம். எந்த நிர்வாகமும் ஜன சம்மதத்தை அஸ்திவாரமாகக் கொண்டது. சட்ட பூர்வமாக ஜனங்களின் பிரதிநிதிகளைக் கொண்டது சட்ட சபை. ஜனங்களின் நன்மை தீமைகளை எடுத்துச் சொல்ல அவர்களுக்கு அதிகாரம் உண்டு. உரிமையைக் கொடுத்து உதாசீனம் செய்வது சுலபமா? நிர்வாகம் நிலைக்காது. எனவே, கண்டனத்தில் காரியம் உண்டு; கண்காணிப்பில் லாபமுண்டு. விடுவானேன்? இன்றைய நிலைமையில் விடுவதும் விவேகமல்ல. மூன்று காரணங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம். முதலாவது நிர்வாக சபையின் புதிய அமைப்பு; இந்தியர் பெரும்பான்மை ஸ்தானத்தை வகிக்கின்றனர். இயன்ற அளவு உதவக்கூடியவர். அவர்களுக்குச் சபையிலே கூர்தீட்டிக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்தரங்கத்தில் போராட முடியும். சபையின் திட்டமான முடிவைத் தாங்கிப் பேச தைர்யமிருக்கும். அவர்கள் வார்த்தைக்கு மதிப்பும் உண்டாகும். அதிகார வர்க்கத்தின் பாவையாக அவர்கள் மாறினால் ஓரளவு பொறுப்பு சட்டசபையைச் சாரும். அதை மறந்து விடக்கூடாது. இரண்டாவது, காங்கிரஸ் மாகாணங்களில் இன்றுள்ள நிலைமை. கவர்னரின் யதேச்சாதிகாரம் நடந்து வருகிறது. குறைகள் குவிந்து வருகின்றன. கேட்பாரில்லை. மத்திய சட்டசபையில் மூட்டையை அவிழ்த்தால் குணம் சிறிது காணலாம். கொஞ்சத்திற்குக் கொஞ்சம் நிலைமை கட்டுக் கடங்கும். செய்வது அவசியமல்லவா? மூன்றாவதாக, யுத்தம் நெருங்கிவிட்டது. ராணுவச் செலவு நிலைக்கேறி வருகிறது. வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி நினைத்தாலே வயிற்றில் புளியைக் கரைக்கிறது. புதிய வரிகள் விதிக்கலாம். பழைய வரி விகிதங்கள் உயரலாம். பணத்தை எழுப்புவதில் எச்சரிக்கை வேண்டும். செலவழிப்பதில் கண்காணிப்பு வேண்டும். மத்திய சட்டசபையே இந்தக் கடமைகளைச் செலுத்தக்கூடிய இடம். இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். இந்தக் காலத்தில் கண்டித்துப் பேசுவது கஷ்டம். வெளியே பேசினால் குற்றமாகலாம். உள்ளே பேச உரிமையுண்டு. உறுத்தவும் உறுத்தும். இவையனைத்தையும் கவனித்துக் காங்கிரஸ் கக்ஷியினர் முடிவுக்கு வரவேண்டும். சட்டசபை வேலையை மறந்துவிடுங்கள் என்கிறார் சர்தார் படேல். மறப்பது முறையல்ல; மக்கள் மன்னிக்க மாட்டார்கள். இந்தியா முழுவதிலிருந்தும் 40 பேர் சட்டசபை வேலையில் முனைந்தால் குடி முழுகிப்போகும் என்றால் காங்கிரஸ் கட்சியின் பலத்தையே பழிப்பதாகும். எனவே முடிவு மாற வேண்டும். காலப் பிற்பாடாகு முன் மாறவேண்டும்.